**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 17 March 2015

# சிங்கப்பூரால் நிலைத்திருக்க முடியுமா?

சிங்கப்பூர் பிரஸ் ஹோல்டிங்க்ஸ் நிறுவனத்தின் புத்தக வெளியீட்டுப் பிரிவு 'சிங்கப்பூரால் நிலைத்திருக்க முடியுமா?' எனப்படும் தனது புதிய புத்தகத்தை நேற்று மாலை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளியில் நடந்த நிகழ்ச்சியில் வெளியிட்டது.

லீ குவான் இயூ பொதுக் கொள்கைப் பள்ளியின் முதல்வர் பேராசிரியர் கிஷோர் மஹ்புபானி இந்தப் புத்தகத்தை எழுதியுள்ளார். பொதுத்துறை ஊழியர்கள், கல்வியாளர்கள் உட்பட 100க்கும் மேற்பட்டோர் இந்த புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

'சுதந்திர நாடாக நம்மால் நிலைத்திருக்க முடியுமா?' எனும் கேள்விக்கு 'ஆம்', 'இல்லை' 'இருக்கலாம்' என்ற பதில்களின் அடிப்படையில் நூல் ஆசிரியர் விளக்கம் அளித்திருக்கும் இந்நூல் 280 பக்கங்களைக் கொண்டது.

சுயபரிசோதனையும் தொடர்ச்சியான பிரதிபலிப்பு களும் அனைத்து சிங்கப்பூரர்களின் முக்கியக்கூறாக விளங்க வேண்டும் என்பதால் சிங்கப்பூரர்கள் இந்தக் கேள்விகளை எப்போதும் கேட்டுக்கொள்ள வேண்டும் என்கிறார் நூல் ஆசிரியர் திரு கிஷோர் மஹ்புபானி.

நாடு ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் இவ்வேளையில் சிங்கப்பூரர்களிடையே சுய பிரதிபலிப்புக் கலாசாரத்தை உருவாக்கி, மேம்படுத்துவதை இந்தப் புத்தகத்தின் நோக்கமாகக் கொண்டு உருவாக்கியுள்ளார் திரு மஹ்புபானி.

ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் 'திங்க்–டேங்', கார்டியன் நியூஸ், தி நியூ யார்க் டைம்ஸ், தி நியூ யார்க் ரிவ்யூ ஆஃப் புக்ஸ், டாவோஸ் வோர்ல்ட் இகனாமிக்கல் ஃபோரம், பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தின் 'இன்னோவேஷன்ஸ் ஃபார் சக்செஸ்ஃபுல் சொசைட்டிஸ்' எனும் திட்டப்பணி போன்றவற்றில் சிங்கப்பூரைப் பற்றி அவர் எழுதிய சில சிறந்த கட்டுரைகளும் இடம்பெற்றுள்ளன.

ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ் நாளிதழின் பொது மேலாளர் திருவாட்டி சூசன் லோங், "இந்தப் புத்தகத்தை வெளியிடுவதிலும் பேராசிரியர் கிஷோர் மஹ்புபானியுடன் அவரது அண்மைய புத்தகத்தில் பணியாற்றியதிலும் மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

"இந்தப் புத்தகம் சிங்கப்பூரின் மிக முக்கியமான யோசனையாளர்களின் மனநிலையை ஆழ்ந்து நோக்குவதுடன் எதிர்காலம் சிங்கப்பூருக்கு என்ன வைத்திருக்கிறது என்பது குறித்த ஆசிரியரின் எண்ணங்களை வெளிப்படுத்துகிறது.

"சிங்கப்பூரின் வரலாறு, பொருளாதாரம், அரசியல் போன்ற துறைகளில் ஏற்கெனவே இருக்கும் புத்தகங்களுடன் இதுவும் மதிப்புமிக்க சேர்க்கையாகும்," என்று அவர் குறிப்பிட்டார்.

'சிங்கப்பூரால் நிலைத்திருக்க முடியுமா?' எனும் தலைப்பிலான புத்தகம் $26.75க்கு அனைத்து முக்கிய புத்தகக் கடைகளிலும் இன்று முதல் கிடைக்கும். இந்தப் புத்தகத்தை www.stpressbooks.com.sg என்ற இணையப்பக்கம் வழியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.